17th August 1963]

(இ) இல்லையென்றால், காரணமென்ன?

கனம் திரு.மதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் புதிய மருத்துவக் கல்லூரி எதையும் துவக்கும் உத்தேசம் ஆலோசனையில் இல்லை.

திரு. சோ. ஆறுமுகம்: ஸார், சேலம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க சர்க்கார் பரிசிலனை செய்து, கட்டாயமாக ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்கு இனியாவது ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஸார், ஏற்கெனவே நம் மாநிலத்தில் ஐந்து மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. சேலத்தில் தனிப்பட்ட முறையில் இன்னொரு கல்லூரி ஆரம்பிப்பதைப்பற்றி ஒன்றும் உத்தேசம் கிடையாது. அது இப்போது இயலாத காரியம்.

சிமிட்டித் தொழிற்சாலை (ராமநாதபுரம் மாவட்டம்)

* 178 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் தாலூகாவில் சிமிட்டி செய்வதற்கு மூலப் பொருள்கள் கிடைப்பதால் அங்கு ஒரு சிமிட்டி தொழிற்சாலையை அமைக்க உத்தேசமுண்டா?

(இ) ஆமென்றால், எப்போது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் தாலூகாவிலுள்ள இராமேஸ்வரத்தில் தனியார் துறையில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவ அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலை நிறுவுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார் மதுரை மாவட்டத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்கு வேண்டிய அளவு லைம்ஸ்டோன் கிடைப்பதாக இப்போது எங்களிடத்தில் தகவல் இல்லை.

குற்றம் சாட்டப்பட்ட ஏழைகளுக்கு வழக்காட வசதி

* 179 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குற்றம் சாட்டப்பெற்று நீதி மன்றங்களில் நிறுத்தப்படுவோர்களில் தாங்கள் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வழக்காடி